**கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் - 2012**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 பாதகமான அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் வழங்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1:2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1:2:1 தாபனத்தின் தொடர் செயற்பாடு**

தாபனம் 2000 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை தொடர்ந்து நட்டத்தை ஏற்றிருந்ததன் காரணமாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,418,347,555 தொகையான மறைப் பெறுமதியைக் காண்பித்து தேறிய சொத்துக்கள் குறைவடைந்துள்ளதுடன் ரூபா 4,397,000,000 கூட்டுத்தொகையான நீண்ட கால முறிப் பொறுப்பு மற்றும் தொடர்ந்து விருத்தியடையும் ரூபா 2,419,101,639 தொகையான நடைமுறைச் பொறுப்புகள் நிலவியதன் காரணமாக திறைசேரியில் அல்லது அரசாங்கத்தின் வேறு நிதி உதவி இன்றி நிலையத்தைச் செயற்படுத்துவது தொடர்பாக உறுதியற்ற நிலை நிலவுவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**1.2.2 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புகள மேற்கொள்ளப்பட்டுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01**

கணக்கீட்டு நியமங்களின் மூலம் வேண்டப்படும் அல்லது அங்கீகரிக்கப்பட்டால் அன்றி வருமானமும் செலவினங்கள் எதிரீடு செய்யப்படலாகாத போதிலும் ரூபா 348,757,315 தொகையான நிதிச் செலவினங்களில் ரூபா 5,239,174 தொகையான நிதி வருமானம் கழிக்கப்பட்டு தேறிய பெறுமதி மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 08**

நடைமுறையல்லாச் சொத்துக்களிற்காக பயனுள்ள வாழ்க்கைக் காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிராத காரணத்தால் ரூபா 241,593,577 கிரயமான சொத்துக்கள் முற்றாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும் மேலும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தன. இதன் படி,

மதிப்பிடப்பட்ட தவறு மீள்மதிப்பிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40**

வருமானக் கூற்றில் குத்தகை வருமானமாக ரூபா 186,576,358 தொகை அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் வருமானம் உழைக்கப்படுவதற்கு உரிய கட்டிடங்கள், நிதி நிலைமைக் கூற்றில் முதலீட்டு சொத்துக்களின் கீழ் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கணக்கீட்டு முறைமையில் நிலவிய பின்வரும் நலிவுகள் காரணமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தரவுகளினதும் தகவல்களினதும் சரியான நிலையை உறுதி செய்துகொள்வதற்கு முடியாதிருந்தது.

i. தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் நிதியாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி பூர்த்தியடைவதுடன் அதன் உப கம்பனிகளின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் நிதியாண்டு மார்ச் 31 ஆம் திகதி பூர்த்தியடைந்திருந்தது. 2012 திசெம்பர் 31 ஆம் திகதி ஒன்றிணைந்து நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் தாபனத்தின் உப கம்பனிகளில் 2013 மார்ச் 31 ஆம் திகதி தயாரிக்கப்பட்டு தனியார் கணக்காய்வாளர்களால் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புகள் நிதியாண்டின் காலப்பகுதி தொடர்பான கவனம் எடுக்கப்படாது ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

ii. கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் பற்றுச்சீட்டுக்களும் முறைப்படி காசேடுகளில் பதிவு செய்யப்பட்டிராத காரணத்தால் கணக்கீடு செய்யப்பட்டிராத பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் இன்மை குறித்து கணக்காய்வில் மறுக்கமுடியாதிருந்தது.

iii. மீளாய்வாண்டின் போது பரீட்சை மீதியைப் பரீட்சிக்கையில் 168 சொத்துக்கள் மற்றும் செலவினக் கணக்குகளின் கூட்டுத்தொகையான ரூபா 27,584,061,602 தொகையான வரவு மீதியும் 110 பொறுப்புகள் மற்றும் வருமானக் கணக்குகளின் கூட்டுத்தொகையான ரூபா 30,129,471,178 செலவு மீதியும் நிதிக்கூற்றுக்களுடன் இணைந்திருக்கவில்லை. இந் நிலை நிதிக்கூற்றுக்களில் தீர்க்கப்படுகையில் தாக்கத்தை விளைவிக்கும்.

(ஆ) வியாபாரப் பொருட்கள் கொள்வனவு செய்யப்படுவதற்காக 2006 ஆம் ஆண்டின் போது பொதுத் திறைசேரியால் வழங்கப்பட்டிருந்த ரூபா 275,000,000 தொகையான கடன் தொகையை மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இதனை மீளச் செலுத்த வேண்டிய கடனாகக் காண்பிக்கப்படுவதற்குப் பதிலாக மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை திரண்ட கணக்காய்வுக் கட்டணத் தொகையான ரூபா 10,174,170 தொகைக்காக ரூபா 1,871,000 தொகை மாத்திரம் செலுத்த வேண்டிய மீதியாக ஐந்தொகையில் நடைமுறைப் பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன. இதன் படி, ரூபா 8,303,170 தொகையான நடைமுறைப் பொறுப்புகள் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் தவிர்க்கப்பட்டிருந்தன.

(ஈ) வாகன விற்பனை இலாபம் ரூபா 5,101,356 தொகையான போதிலும் இது நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,892,489 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் வாகன விற்பனை இலாபம் ரூபா 791,133 கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(உ) தாபனத்தால் அரசாங்க வங்கி ஒன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட குறுங்காலக் கடன் தொகை தொடர்பாக 2014 ஒக்டோபர் 13 ஆம் திகதி, அரசாங்க வங்கி முகாமையாளரின் கடிதத்தின் படி, 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு ரூபா 29,504,364 தொகையான செலுத்த வேண்டிய தண்டப்பணம் தொடர்பாகக் கண்டறியப்பட்டதுடன் கடனிற்காகச் செலுத்தப்பட வேண்டிய மொத்த வட்டித் தொகை ரூபா 151,697,824 ஆகவும் வருடத்திற்கு உரித்தான வட்டித் தொகை ரூபா 27,166,711 ஆகவும் காணப்பட்டது. இச் செலவினம் மீளாய்வாண்டின் போது கணக்கீடு செய்யப்படுவதற்கோ அல்லது சீராக்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை பொதியிடற்பிரிவிற்கு கிடைக்கப்பெற்றிருந்த மொத்த வெள்ளைச் சீனியின் அளவு 883,951 கி.கி. ஆனதுடன் அன்றைய தினம் வரை பொதியிடப்பட்டிருந்த அளவு 713,832 கி.கி. ஆகும். இதன் படி, 170,119 கி.கி. அளவான வேறுபாட்டிற்கான காரணம் கண்டறியப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2013 பெப்ரவரி 21 ஆம் திகதி தலைவரின் கூற்றின் படி, 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை பொதியிடப்பட்ட மொத்த சீனிப் பொதியின் அளவு 717,788 ஆனதுடன் வரிசைப் படி சமர்ப்பிக்கப்பட்ட பொதிகளின் அளவு 694,274 ஆனமையால் 23,514 பொதிகளின் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(இ) 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பொதியிடப்பட்ட சீனி அளவிற்காக பெறவேண்டிய கட்டணம் ரூபா 882,879 (717,788 பொதிகள் x ரூபா 1.23) ஆக வேண்டிய போதிலும் வழங்கப்பட்டுள்ள பட்டியலின் படி, இது ரூபா 864,429 ஆகக் காணப்பட்டது.

(ஈ) தாபனத்தின் நெற் சந்தைப்படுத்தல் சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,587,080,892 தொகையான மீதி நிலவுவதாக நெற் சந்தைப்படுத்தல் சபையின் 2012 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களின் படி உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 962,585,013 செலுத்தப்பட வேண்டிய மீதியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இவ் வேறுபாடு இனங்காணப்பட்டு தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தாபனத்தால் அரச வங்கி ஒன்றிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த குறுங்காலக் கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 207,050,943 ஆகிய போதிலும் வங்கியால் அனுப்பிவைக்கப்பட்ட மீதியை உறுதிப்படுத்தும் கடிதத்தின் படி, அக் கடன் மீதி ரூபா 207,097,942 ஆகக் காணப்பட்டது. இவ் வேறுபாடு இனங்காணப்பட்டு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

---

பின்வரும் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தப்படவோ அல்லது ஏற்றுக்கொள்ளப்படவோ முடியாதிருந்தது.

(அ) நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 2,010,153,232 கூட்டுத்தொகையான 10 சொத்துக் கணக்கு மீதிகள், ரூபா 8,971,636,580 கூட்டுத்தொகையான 5 பொறுப்புக் கணக்கு மீதிகள், ரூபா 54,843,226 தொகையான 5 வருமானக் கணக்கு மீதிகள், ரூபா 1,781,563,583 தொகையான திரண்ட, ரூபா 240,761,731 தொகையான நிலையான சொத்துக்கள் கைதவிர்க்கப்படுவது தொடர்பான ஆவணங்கள், உரித்துறுதிகள், நிலையான சொத்துப் பதிவேடுகள், குத்தகை உடன்படிக்கைகள், முதலீட்டுச் சான்றிதழ்கள் மீதி உறுதிப்படுத்தல் சான்றிதழ்கள் ஆகிய சான்று.

(ஆ) கூட்டாக ஏனைய கம்பனிகளுக்கு உரித்தான உடன்படிக்கைகளில் காண்பிக்கப்பட்ட ரூபா 106,955,071 தொகையான வருமானம், ரூபா 414,802 தொகையான நடைமுறையல்லாத சொத்துக்கள், ரூபா 41,262,131 தொகையான நடைமுறைச் சொத்துக்கள், ரூபா 11,031,768 தொகையான உரிமைகள், ரூபா 30,645,165 தொகையான நடைமுறைப் பொறுப்புகள் ரூபா 86,931,993 தொகையான மொத்த இலாபம் மற்றும் ரூபா 10,785,423 தொகையான தேறிய இலாபம் என்பவற்றை உறுதிப்படுத்திக்கொள்ளும் விதத்தில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதற்கு உரித்தான கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பட்டோலைகள்.

(இ) நிலையத்தின் நிதி நிலைமைக் கூற்றின் நடைமுறைப் பொறுப்பின் கீழ் செலுத்தப்பட வேண்டிய பெறுமதியாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 183,599,926 தொகையான 16 கணக்கு மீதிகள் குறிப்பாக இனங்காணப்படுவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்தது.

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திற்காக பாதுகாப்பு சேவை வழங்கப்படுவதற்காக சதோச பொருளாதார சேவைகள் தனியார் நிறுவகத்திற்கு ரூபா 167,900 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் அக் கொடுப்பனவிற்காக உரிய பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் விபரம், கடமைக் கால அட்டவணை தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு தவறியிருந்தது.

**1.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

---------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) லக் சதொச விற்கு ஒப்படைக்கப்பட்ட வெலிசர களஞ்சியத் தொகுதியில் காணப்பட்ட ரூபா 126,156,746 கூட்டுத்தொகையான சொத்துக்களுக்காக எவ்வித பணமும் அறவிடப்படுவதற்கு 2016 மார்ச் 30 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நான்கு வருடங்களிற்கு மேற்பட்ட காலத்திலிருந்து 149 நிறுவகங்களிடமிருந்தும் நபர்களிடமிருந்தும் நிலையத்திற்குக் கிடைக்கப்பெற வேண்டியிருந்த ரூபா 77,257,552 தொகையான வாடகை வருமானத்தை அறவிடப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2015 ஒக்டோபர் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2004 ஆம் 2005 ஆம் ஆண்டுகளின் போது அரிசி மற்றும் கோதுமை மா இறக்குமதி செய்யப்படுவதற்காக திறைசேரியின் பிணையில் அரச வங்கி ஒன்றால் நிலையத்திற்குக் கிடைக்கப்பெறவேண்டிய கேள்வி மனுப்பிணைக் கடனான ரூபா 207,050,943 தொகை 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் விளைவற்றுக் காணப்பட்டது.

(ஈ) 2012 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற 4 மாதங்களுக்கு உரித்தான பொதியிடற் கட்டணமான ரூபா 864,429 தொகை 2016 பெப்ரவரி 28 ஆம் திகதி வரை லங்கா சதொச வினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 2011 ஆம் ஆண்டிற்காக வருடாந்த குத்தகை வாடகை மற்றும் தேசிய பானங்களுக்கான அனுமதிப்பத்திரக் கட்டணமாக லங்கா சதொச நிலையத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 71,561,640 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்படுவதற்கோ அல்லது கணக்குகளிற்கு சீராக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1991 இன் 31 ஆம் இலக்க கூட்டுறவு மொத்த விற்பனை தாபனம் (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 2.2(அ) ஆம் பிரிவு | தாபனத்தில் நிதி முதலீடு செய்யப்படுகையில் தற்போதுள்ள பொதுக் கம்பனிகளில் மாத்திரமே செய்யப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணான வகையில் ரூபா 10 பெறுமதியான பெயரளவு முதலீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டு வரையறுக்கப்பட்ட சதொச பொருளாதார நிலைய சேவைகள் தனியார் கம்பனியின் பெயரில் அரச கம்பனி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு நிலையத்தில் இருந்து சம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| | (i) 6.5.1 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களுடன் ஆண்டறிக்கையின் வரைபு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 8.3.9 ஆம் பந்தி | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக உரிய அமைச்சும் ஏனைய 03 நிறுவகங்களிற்காக ரூபா 1,366,958 கூட்டுத்தொகையான செலவினங்கள் ஏற்கப்பட்டிருந்தன. |

## 2. நிதி மீளாய்வு

### 2:1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2012 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவுற்ற ஆண்டிற்காக கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்தின் தேறிய நட்டம் ரூபா 661,602,751 தொகையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டில் ரூபா 313,605,785 தொகையான தேறிய நட்டம் ஏற்பட்டிருந்தது. இதன் படி, ரூபா 347,996,966 தொகையால் அதாவது 111 சதவீதத்தால் தாபனத்தின் தேறிய நட்டம் அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 50,645,942 தொகையால் அதாவது 36 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 404,172,306 தொகையால் அதாவது 78 சதவீதத்தால் அதிகரித்திருந்தமை தேறிய நட்டம் இவ்வாறு அதிகரிப்பதற்குக் காரணமாகியிருந்தது. செயற்பாட்டு செலவினம் அதிகரித்தமை குறித்து ரூபா 378,003,569 தொகையான நட்டக் கழிவு காரணமாகியிருந்ததுடன் இது செயற்பாட்டுச் செலவினத்தில் 94 சதவீதமாகும்.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

#### விபரமான வருமானக் கூற்று

சமர்ப்பிக்கப்பட்ட விபரமான வருமானக் கூற்றின் படி, முக்கியமான விகிதங்கள் சில கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | 2012 | 2011 |
|---|---|---|
| இலாப விகிதம் | | |
| - மொத்த இலாப விகிதம் (நூற்றிற்கு) | 16 | 21 |
| - தேறிய இலாப விகிதம் (நூற்றிற்கு) | (305) | (246) |

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளய்வாண்டின் தேறிய இலாபம் 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமை மற்றும் தேறிய இலாபம் 59 சதவீதத்தால் அதிகரித்தமையால் தாபனத்தின் நிதி விளைவுகள் வீழ்ச்சியடைந்தமை அவதானிக்கப்பட்டது.

### (ஆ) நிதி நிலைமைக் கூற்று

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் படி, முக்கிய விகிதங்கள் சில கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| | 2012 | 2011 |
|---|---|---|
| திரவ விகிதம் | | |
| - நடைமுறை விகிதம் | 0.54:01 | 0.48:01 |
| - உடன் சொத்து விகிதம் (நூற்றிற்கு) | 0.42:01 | 0.40:01 |

i. மீளாய்வாண்டின் போது தாபனத்தின் நடைமுறை விகிதம் 0.54:01 தொகையாகவும் விரைவுச் சொத்து விகிதம் 0.42:01 ஆகவும் காணப்பட்டமையால் குறுங்காலப் பொறுப்புகளைத் தீர்ப்பதற்குள்ள இயலாமை அதாவது திரவத்தன்மை சிக்கலான நிலைக்கு உள்ளாகியிருந்தது.

ii. தாபனத்தால் தொடர்ந்து நட்டம் ஏற்படுத்தப்பட்டிருந்தமையால் நிறுத்தி வைத்திருந்த உழைப்புகள் மறைப் பெறுமதிக்கு மாற்றப்பட்டிருந்ததுடன் தொழிற்படு மூலதனம் தொடர்ச்சியாக செலவிடப்பட்டு அதிவீழ்ச்சி நிலை ஒன்று நிலவுவது அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்

(அ) எம்பிலிப்பிட்டிய சந்தையில் 2012 ஆம் ஆண்டின் முதல் 06 மாதங்களில் பிளாஸ்டிக் கூடைகளின் விற்பனையால் நிலையத்திற்குக் கிடைக்கப்பெற்ற பங்கு வருமானம் ரூபா 27,668 தொகையான போதிலும் இதற்கான சம்பளக் கிரயம் மாத்திரம் ரூபா 136,296 தொகையானமையால் ரூபா 108,628 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) தாபனத்திடம் இருந்த 32 விற்பனை நிலையங்களும் களஞ்சியக் கட்டிடங்களும் அரச கம்பனியான வரையறுக்கப்பட்ட லங்கா சதொச கம்பனியால் பொறுப்பேற்கப்பட்டிருந்ததுடன் கட்டிட வாடகை தொடர்பாக அரசாங்க மதிப்பீட்டாளரிடம் இருந்து ஓர் அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) தாபனத்தால் 2010 நவம்பர் 03 ஆம் திகதி வரையிலும் ரூபா 51,718,227 தொகையான சொத்துக்கள் வரையறுக்கப்பட்ட லங்கா சதொச கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக அறவீடுகள் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரூபா 5,097,455 பெறுமதியான 12 ‘‘இழுவை இயந்திரங்களின்’’ மின் மோட்டர்கள் காணாமற் போனமை குறித்து சொத்துக்களின் பாதுகாப்பு, பொறுப்பு ஒப்படைப்பு போன்றவற்றை நிர்ணயிப்பதற்காக அது தொடர்பான முறையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பொறுப்பு வாய்ந்த தரப்பினர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) தாபனத்தால் 1999 ஆம் ஆண்டின் போது இன்கிரின் இன்ஸ்டிடியூட் ஒப் பிரின்டிங் அன்ட் கிரபிக்ஸ் கம்பனியின் ரூபா 9,923,710 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அக் கம்பனி தொடர்ந்து நட்டத்தை ஏற்றிருந்தமையால் 2006 ஒக்டோபர் 23 ஆம் திகதி நீதிமன்றத் தீர்ப்பின் படி

கலைக்கப்பட்டிருந்தது. ஆகையால் முதலீடு செய்யப்பட்ட தொகையை மீளப்பெறுவது தொடர்பில் நிச்சயமற்ற நிலை நிலவியது.

(ஊ) தாபனத்தால் 1999 ஆம் ஆண்டின் போது சதொச சில்லறை கம்பனியில் ரூபா 171,928,690 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 1999 முதல் 2012 ஆம் ஆண்டு வரை எவ்வித இலாபத்தையும் தாபனம் பெற்றிருக்கவில்லை.

## 3.2 செயற்பாட்டுத் செயற்திறமையீனங்கள்

2012 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த காலப்பகுதியின் போது பொதியிடற் பிரிவின் வருமானம் ரூபா 864,429 தொகையான போதிலும் அதன் ஊழியர் தரப்பினருக்காக மீளாய்வாண்டின் போது சம்பளங்கள் மற்றும் நாளாந்த படிப்பணமாக ரூபா 2,101,077 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தாபன ஸ்தாபிப்பு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு அல்லது ஏனைய சட்டத்தின் மூலம் ஏற்பாடு செய்யப்பட்டிராத மற்றும் தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் உள்ளடக்கப்பட்டிராத செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவிக்காக முன்னைய ஆண்டின் போது ரூபா 1,139,279 தொகையும் மீளாய்வாண்டின் போது ரூபா 1,311,943 தொகை சம்பளமாகவும் படிப்பணமாகவும் செலுத்தப்பட்டிருந்தது. இதன் படி, கணக்காய்வுத் தினமாகிய 2015 ஆகஸ்ட் மாதம் வரையில் அப் பெறுமதி ரூபா 4,691,272 வரை அதிகரித்திருந்தது.

(ஆ) வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த உணவு ஆணையாளர் திணைக்களத்திற்கு உரித்தான ஹிங்குரக்கொடவில் உள்ள 02 களஞ்சியங்களிற்கு உணவுத் திணைக்களத்தின் அங்கீகாரம் இன்றி ரூபா 78,978,504 தொகையான செலவினம் ஏற்கப்பட்டு இரண்டு ஆலைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

## 3.4 வெளிப்படையான முறைகேடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வரையறுக்கப்பட்ட கட்டிடப பொருட்கள் கூட்டுத்தாபனத்தில் இருந்து 2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 105,725 தொகையான பொருட்கள் சதொச நிலையத்திற்குக் கிடைக்கப்பெற்றமை குறித்து உறுதிப்படுத்தல்கள் இன்றி பட்டியல்களின் போட்டோப் பிரதிகளை அடிப்படையாகக் கொண்டு 2012 நவம்பர் 12 மற்றும் 2012 திசெம்பர் 03 ஆம் திகதிகளின் போது பகுதியளவில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) தாபனத் தலைவரின் சொந்த வீட்டிற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் மூவர் ஈடுபடுத்தப்பட்டு 2012 ஆம் ஆண்டின் முதல் 06 மாதங்களிற்காக சம்பளமும் படிப்பணமும் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமையால் நிலையத்திற்கு ரூபா 656,311 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்ததுடன் அத் தொகையை அறவிடுவதற்கு 2016 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆண்டின் போது புதிதாகச் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஓர் உத்தியோகத்தருக்கு நிலவும் சட்டங்கள் விதிகளிற்கு முரணான வகையில் சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டமையால் ரூபா 131,670 தொகையான சம்பளம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் தினமாகிய 2015 செப்தெம்பர் வரையில் அப் பெறுமதி ரூபா 506,000 ஆக அதிகரித்திருந்தது.

(ஈ) நாளாந்த செலவினத் தேவைப்பாடுகளை இனங்காணப்படாது இரத்தினபுரி இருப்புக் களஞ்சியத்தின் செயற்பாட்டு உத்தியோகத்தருக்கு சில்லறைக் காசு முற்பணமாக ரூபா 25,000 தொகை 2012 சனவரி மாதம் வழங்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆகஸ்ட் 09 ஆம் திகதி வரை ரூபா 6,251 செலவிடப்பட்டிருந்தமையால் மிகுதிப் பணமான ரூபா 18,749 தொகை பௌதீக மெய்மையாய்வின் போது கணக்காய்வு உத்தியோகத்தருக்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கு காசாளர் தவறியிருந்தார். இது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை கணக்காய்விற்கு அறிவிக்கப்படுவதற்கு முகாமைத்துவம் 2015 நவம்பர் மாதம் வரையிலும் தவறியிருந்தது.

(உ) ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு மாறாக ஒப்பந்த அடிப்படையில் 2011 ஆம் ஆண்டின் போது ஆட்சேர்க்கப்பட்ட உதவி உத்தியோகத்தர் களஞ்சிய நடவடிக்கைகளுக்காக நியமிக்கப்பட்டிருந்தார். 2011 ஆம் ஆண்டின் இறுதியில் இக் களஞ்சியத்தில் இருப்புச் செயற்பாட்டு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருக்கையில் குறித்த உத்தியோகத்தர் கடமைக்குச் சமூகமளிக்காத நிலையில் 2012 ஆம் ஆண்டிற்காக ஒரு மாதத்திற்கு ரூபா 17,540 படி ரூபா 210,480 கூட்டுத்தொகையான சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

**3.5 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

2015 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தால் நான்கு கணக்காளர்களின் சேவை பெறப்பட்டு சம்பளங்களும் படிப்பணமுமாக ரூபா 3,244,869 தொகை செலுத்தப்பட்டிருக்கையில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தில் 2012 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2015 ஆம் ஆண்டின் போது தயாரிக்கப்படுவதற்காக ரூபா 613,520 தொகையான பணம் செலுத்தப்பட்டு பட்டயக் கணக்காளர் கம்பனி ஒன்றின் சேவை பெறப்பட்டிருந்தது.

## 3.6 மறுசீரமைப்புக் கொடுக்கல்வாங்கல்கள்

--------------------------------------------------------------------

2003 ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தின் மறுசீரமைப்பு ஆரம்பிக்கப்பட்டதுடன் 2003 திசெம்பர் 01 ஆம் திகதியில் உள்ளவாறு 6 வணிக வங்கிகளுக்குச் செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 5,493 மில்லியன் தொகையான கடன் தொகையில் ரூபா 4,397 மில்லியன் செலுத்தப்பட்டு தீர்க்கப்படுவதற்கு வணிக வங்கி உடன்படுத்தப்பட்டு இதற்காக 13 ஆண்டில் முதிர்வடையும் திறைசேரி முறி உரிய வணிக வங்கிக்கு வழங்கப்பட்டிருந்தது.

அத்தகைய திறைசேரி முறி நிலையத்தின் நிலையான சொத்துக்களில் ரூபா 1800 மில்லியன் தொகையான சொத்துக்கள் பொது முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவால் விற்பனை செய்யப்பட்டு பெறப்படும் தொகையில் 2005 ஆம் ஆண்டின் போது தீர்க்கப்படுவதற்கும் அம் முறி கடனுக்காக அரையாண்டு வட்டிக் கொடுப்பனவிற்கும், செலுத்தப்பட வேண்டிய வட்டியில் 50 சதவீதம் திறைசேரியால் ஏற்கப்படுவதற்கும் எஞ்சிய 50 சதவீதம் சதொச வின் ஆதனம் சதொச ரிடேல் கம்பனிக்கு வாடகைக்கு வழங்கப்படுவதனால் கிடைக்கும் வாடகை வருமானத்தில் செலுத்தப்படுவதற்கும் உடன்பட்டிருந்த போதிலும் மறுசீரமைப்பின் கீழ் திறைசேரி முறிக்கான பொறுப்பைத் தீர்ப்பதற்கு, பொது முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொத்துக்களின் ஒப்படைப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும், 2004 பெப்ரவரி 03 ஆம் திகதிய 04/0103/136/007/EPC/710 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, நிலையத்தைக் கலைப்பதற்கும் தனியார் மயமாக்கப்படுவதற்கும் எடுக்கப்பட்ட தீர்மானம் 2004 ஆகஸ்ட் 11 ஆம் திகதிய 04/0892/012/001 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் படி, இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இதன் படி, 8.5 சதவீத கழிவு வீதத்தின் கீழ் திறைசேரி முறிகளில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நடைமுறை மீதியான ரூபா 3,173 மில்லியனும், ரூபா 1,224 மில்லியனுமான கழிவு மீதியும் சேர்க்கப்பட்டதை அடுத்து பெறப்பட்ட அந்த ரூபா 4,397 மில்லியன் தொகையான முதிர்வு மீதிக்கு, கடன் தொகை தீர்க்கப்படுவதற்காக சதொச ரிடேல் கம்பனியின் கடன் உரிமையாளர்களும் மேற்குறித்த 06 வங்கிகளில் 03 வங்கிகளுக்கு மேலும் திறைசேரியால் செலுத்தப்பட்ட பெறுமதிக்காக திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய ரூபா 200 மில்லியன் தொகையுடன் ரூபா 4,597 கூட்டுத்தொகை பொறுப்பாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.
இதற்கு உரித்தாக திறைசேரிக்குச் செலுத்தப்பட வேண்டிய திறைசேரி வட்டிப் பொறுப்பான ரூபா 2,806,167,798 தொகையான பெறுமதி ‘‘சதொச முறிக்காக செலுத்தப்பட வேண்டியது’’ எனும் பெயரில் நிதிக்கூற்றுக்களில் நடைமுறையற்ற பொறுப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

மேலும் இச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 4,597 மில்லியன் தொகையில் ரூபா 200 மில்லியன் தொகையான மீதி திறைசேரிக்கு பெறவேண்டிய பெறுமதியா என்பது குறித்து திறைசேரியால் உறுதிப்படுத்தப்படுவதற்கு முகாமைத்துவம் தவறியிருந்ததுடன் ஏனைய கடன்கொடுத்தோரின் கீழ் மறுசீரமைக்கப்பட்டவையாக ரூபா 66,363,460 தொகை காண்பிக்கப்பட்டமை மறுசீரமைக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் முறையாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட அல்லது சீராக்கப்பட்டிராததுடன் மறுசீரமைக்கப்பட்ட பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் ‘‘ஏட்டுப் பதிவாக’’ காண்பிக்கப்பட்டிருந்தது.

**3.7 பதவியணியினர் பணிக்கொடைக்கான ஏற்பாட்டிற்காக ஓர் நிதியத்தைக் கட்டியெழுப்புதல்**

1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவு அதிகாரச்சட்டத்தின் படி, பணிக்கொடைக்காக 2012 ஆம் ஆண்டின் இறுதி வரையில் ரூபா 33,700,618 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், எதிர்காலக் கொடுப்பனவுகளை எதிர்கொள்வதற்காக அவ் ஏற்பாடுகள் முதலீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல்**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம், கணக்காண்டு முடிவுற்று 60 நாட்களிற்குள் நிலையத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு 2 ½ ஆண்டுகளிற்கு அண்மித்த காலதாமதத்தின் பின்னர் 2015 ஆகஸ்ட் 05 ஆம் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**4.2 கூட்டிணைந்த திட்டம்**

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம், நிலையத்தின் நோக்கையும் செயற்பணியையும் மேற்கொள்வதற்காக 2012 முதல் 2014 வரை உள்ளடங்கும் வகையில் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் இது காலக்கிரமத்தில் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

**4.3 செயல்நடவடிக்கைத் திட்டம்**

2012 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது 2008 திசெம்பர் 31 ஆம் திகதிய 142 ஆம் இலக்க அரச பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வாளரின் உதவிப் பதவியணியினர் நியமிக்கப்பட்டிராமையால் போதிய கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் போது எவ்வித உள்ளகக் கணக்காய்வு ஐயவினாவோ அல்லது அறிக்கையின் பிரதியோ கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.5 கணக்காய்வுக் குழு**

2005 யூலை 01 ஆம் திகதிய PED/31 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மாதங்களிற்கு ஒரு தடவையாயினும் கணக்காய்வுக் குழக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது 2 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

## 4.6 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2006 செப்தெம்பர் மாதத்தில் நிலையத்தால் இறக்குமதி செய்யப்பட்ட ரூபா 14,501,998 பெறுமதியான அரிசி பதனீட்டிற்கான 140 இயந்திரங்கள் 2015 நவம்பர் வரையிலும் நிலையத்தில் விளைவற்றுக் காணப்பட்டன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. இதன் படி, பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) குத்தகை வருமான அறவீடுகள்
(உ) பதவியணி முகாமைத்துவம்
(ஊ) உள்ளகக் கணக்காய்வு
(எ) சட்ட நடவடிக்கைகள்